## ஜனவரி – 23 – செவ்வாய்

### புனித மேரியான் கொப்

### மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?திபா. 24:8

---

**முதல் வாசகம் : 2 சாமுவேல் 6 : 12 – 15, 17 - 19**

ஆண்டவரின் பேழையை முன்னிட்டு ஓபோது ஏதோமின் வீட்டாருக்கும் அவனுக்குரிய அனைத்துக்கும் ஆண்டவர் ஆசி வழங்கினார் என்று அரசர் தாவீதுக்குச் சொல்லப்பட்டது. எனவே, தாவீது புறப்பட்டுச் சென்று கடவுளின் பேழையை ஓபோது ஏதோமின் இல்லத்திலிருந்து தாவீதின் நகருக்கு அக்களிப்போடு கொண்டு வந்தார். ஆண்டவரின் பேழையை ஏந்தியவர்கள் ஆறு அடிகள் எடுத்து வைத்தும் ஒரு காளையையும் ஒரு ஆட்டுக் கிடாவையையும் பலியிட்டார். நார்ப்பட்டால் நெய்யப்பட்ட ஏபோதை அணிந்து கொண்டு, தாவீது தம் முழுவலிமையோடு ஆண்டவர் முன்பாக நடமாடிக் கொண்டிருந்தார். தாவீதும் இஸ்ரயேல் வீட்டார் அனைவரும் ஆரவாரத் தோடும் எக்காள முழக்கத்தோடும் ஆண்டவரின் பேழையைக் கொண்டு வந்தார்கள். ஆண்டவரின் பேழையைக் கொணர்ந்து அதற்கென நிறுவிய கூடாரத்தின் நடுவில் அதை வைத்தார்கள். தாவீது ஆண்டவர் முன்பு எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் செலுத்தினார். எரிபலிகளையும் நல்லுறவுப் பலிகளையும் செலுத்தியப்பின் தாவீது படைகளின் ஆண்டவர் பெயரால் மக்களுக்கு ஆசி வழங்கினார். பிறகு தாவீது ஆண் முதல் பெண் வரை மக்கள் அனைவருக்கும் இஸ்ரயேல் கூட்டம் முழுவற்கும் ஆளுக்கொரு அப்பத்தையும், பொரித்த இறைச்சியையும், திராட்சைப்பழ அடையையும் கொடுத்தார். மக்கள் அனைவரும் தம் இல்லங்களுக்கு சென்றனர்.

**பதில்பாடல் :** மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ ஆண்டவர் இவரே

**நற்செய்தி : மாற்கு 3 : 31 - 35**

அக்காலத்தில் இயேசுவுடைய தாயும் சகோதரர்களும் வந்து வெளியே நின்று கொண்டு அவரை வரச் சொல்லி ஆள் அனுப்பினார்கள். அவரைச் சூழ்ந்து மக்கள் கூட்டம் அமர்ந்திருந்தது. ”அதோ, உம் தாயும் சகோதரர்களும் சகோதரிகளும் வெளியே நின்று கொண்டு உம்மைத் தேடுகிறார்கள்” என்று அவரிடம் சொன்னார்கள். அவர் அவர்களைப் பார்த்து, ”என்தாயும் என் சகோதரர்களும் யார்? என்று கேட்டு, தம்மைச் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களைச் சுற்றிலும் பார்த்து, ”இதோ! என் தாயும் என் சகோதரர்களும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்” என்றார்.

**தியானம்:** இறைவார்த்தையைக் கேட்டு, இறைசித்தம் செய்யும் சீடர்களின் புதிய குடும்ப உறவை இயேசு வெளிப்படுத்துகின்றார். இயேசுவுடன் கொள்ளும் உறவு வெறும் தசை இரத்தத்தினால் ஆன உறவு அல்ல .மாறாக தெய்வீக தன்மையில் இறை அருளோடு கொள்ளும் உறவில் அமைகிறது. இயேசு இறை வார்த்தையைக்கேட்டு அதன்படி நடக்கும் சீடர்களைக் கொண்ட ஒரு புதிய உறவை கடவுளின் குடும்பத்தை அல்லது மீட்படைந்த மக்களின் குடும்பத்தை குறிப்பிடுகின்றார். குடும்ப உறவைக்காட்டிலும் இயேசுவின் சீடர்களுக்கு நற்செய்தி மீது தான் உறவும் பற்றும் இருக்க வேண்டும் எனப் புதிய ஏற்பாடு முன்மொழிகிறது. அவரது வார்த்தையின்படி நடக்கும் மக்கள் “அந்நியர் அல்ல, வேற்று நாட்டினரும் அல்ல.......கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் (எபி2:19)என்று பவுலடியார். இயேசுவின் குடும்ப உறவைக் குறிப்பிடுகிறார். இயேசுவின் தாயாக,சகோதர சகோதரிகளாக புதிய உறவுக்குள் நாம் நுழைய முடியும். அதற்கு ஒரே வழி “இறைவார்த்தையைக் கேட்பதும், கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் “என மிகுந்த அழுத்தம் தருகிறார் மாற்கு நற்செய்தியாளர். நாமும் இதை உணர்ந்தவர்களாய் அவரது தாயாக சகோதர சகோதரிகளாக மாறுவோம் .